அனுப்புநர்
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-06.

பெறுநர்
இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்ககம்,
சென்னை-06.

ந.க.எண் 2411/எப்2/2021 நாள். 03.10.2024.

*****

பொருள்: மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 6 - எண்ணும் எழுத்தும் திட்டம் - 2024-2025 ஆம் கல்வியாண்டு - 1 முதல் 5 ஆம் வகுப்பு இரண்டாம் பருவத்திற்கான இணைய வழி பயிற்சியில் ஆசிரியர்களை பங்கேற்க தெரிவிக்க கோருதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 147,பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 22.10.2021
2. அரசாணை எண் 129, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள் 18.07.2023
3. அரசாணை (ப)எண் 46,பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 05.02.2024

******

பார்வை(1) மற்றும் (2)இல் காணும் அரசாணைகளின்படி, எண்ணும் எழுத்தும் திட்டம் 1 முதல் 5 ஆம் வகுப்பிற்கு அனைத்து பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பார்வை(3)ல் காணும் அரசாணையின்படி எண்ணும் எழுத்தும் பாடப்பொருள் சார்ந்து 1 முதல் 5 ஆம் வகுப்பிற்குரிய இரண்டாம் பருவத்திற்கான இணையவழியான பயிற்சி Tamilnadu Teachers Platform(TNTP) இல் பாடவாரியான கீழ்காணும் பயிற்சி கட்டகங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பாடம் மற்றும் வகுப்பு |
|---|---|
| 1. | 1 முதல் 3 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் தமிழ் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 2. | 1 முதல் 3 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் ஆங்கிலம் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 3. | 1 முதல் 3 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் கணிதம் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 4. | 4 மற்றும் 5 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் தமிழ் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 5. | 4 மற்றும் 5 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் ஆங்கிலம் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 6. | 4 மற்றும் 5 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் கணிதம் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 7. | 4 மற்றும் 5 ஆம் வகுப்பு- இரீண்டாம் பருவம் அறிவியல் பாடத்திற்கான விளக்கக் காணொளி |
| 8. | 4 மற்றும் 5 ஆம் வகுப்பு- இரண்டாம் பருவம் சமூக அறிவியல் பாடத்திற்கான விளக்கக் காணொளி |

1 முதல் 5 ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் இப்பயிற்சியினை 14.10.2024 முதல் 18.10.2024 முடிய இணைய வழியில் எடுத்துக் கொள்ளும் வகையில் பயிற்சிக்கான கட்டகங்கள் ஆசிரியர்களின் பார்வைக்கு இருக்கும். பயிற்சியை எடுத்து முடித்த பின்பு EMIS மூலம் TNTP இணைப்பில் ஆசிரியர்களுக்காக பயிற்சி மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட இத்தகவலை அனைத்து ஆசிரியர்களுக்கும் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் மூலமாக தெரிவிக்க தங்களை கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இயக்குநர்

02.10.24

**தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006.**

**ந.க.எண்.023085 / கே 2 /2024, நாள். .10.2024.**

மேற்காண் கடித நகல் தகவலுக்காவும், தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) சார்பு செய்யப்படுகிறது.

இயக்குநர்

ரா. 36
9/10/24

**பெறுநர்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

(மின்னஞ்சல் வழியாக)